செய்ய முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத் தந்தால், இது பற்றிப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 39, திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

39—

செட்டிநாட்டு வலையர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**26927*-திருமதி கற்பகம் இளங்கோ :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் இருக்கும் செட்டிநாட்டு வலையர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், செட்டிநாட்டு வலையர்களுக்கு வீடுகள் கட்டித் தருவது குறித்து கோரிக்கை ஏதும் இதுவரை பெறப்படவில்லை. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது ஆதி திராவிடர்களுக்கு மட்டும் இலவசத் தொகுப்பு வீடுகள் என்பதை மாற்றி இதர வகுப்பினருக்கும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கி, அதனைக் கட்டித் தருவதற்கு ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எங்களது பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில், காரைக்குடி தொகுதியில் சாக்கோட்டை ஒன்றியத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட செட்டிநாட்டு வலையர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்க்கைத் தரத்தில் பின்தங்கி, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்வதாலும், அவர்கள் தினக் கூலிகளாக இருப்பதாலும், அடுத்து

1994 நவம்பர் 7]

வரும் ஆண்டுகளில் குறிப்பிட்ட 4 சதவிகிதம் என்பதை அதிகப்படுத்தி, அவர்களுக்கு வீடுகளை அதிகமாக ஒதுக்கீடு செய்து தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் வானமே கூரையாக, பூமியே படுக்கையாகக் கொண்டு, தனக்கு என ஒரு நிலையான இருப்பிடம் இல்லாமல், நாடோடிகள் போன்று சுற்றித் திரியும் நலிவடைந்த நரிக்குறவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்ட மக்களுடைய காவல் தெய்வமாகவும், சமூக நீதி காத்த வீராங்கனையாகவும் திகழ்கின்ற தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்—ஏறக்குறைய ஆண்டாண்டுக் காலமாக பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு வீடுகள் கட்டித் தரமுடியாத சூழ்நிலையில், இந்த ஆண்டுதான் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள்- பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக வீடுகள் கட்டுவதற்கு மொத்த ஒதுக்கீட்டிலே 4 சதவீதம் அளவுக்குப் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுடைய வீடுகள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே உள்ளாட்சித் துறைக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. செட்டிநாட்டு வலையர்களுக்குப் பட்டாவை உள்ளாட்சித் துறையினர் வழங்கினார்கள் என்றால், அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 40, திரு. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

40—

உப்பிலியாபுரத்தில் காதி விற்பனை நிலையம் அமைத்தல்

36152–திரு. வி. ரவிச்சந்திரன்:

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—